6a

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01-15/2009

எனது இலக்கம் : NCD/01/2007
சுகாதார சேவைகள் பணிப்பாளர்
நாயகம் அலுவலகம்
கொழும்பு 10
13.05.2009.

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
போதனா வைத்தியசாலை பணிப்பாளர்கள்
மாகாண வைத்தியசாலைகளின் வைத்திய அதிகாரிகள்
நிறுவனத் தலைவர்கள்.

## உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் - 2009
## புகைத்தலால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை வெளிக்கொணர்தல்

2009 மே 31ஆம் திகதி உலக புகைத்தல் எதிர்ப்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை "புகைத்தலால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை வெளிக் கொணர்தல் " என்பதே நோக்கமாகும். எமது வருங்கால சந்ததியினருக்காக பொருத்தமான சுகாதார அபிவிருத்தி ஒன்றை செயல்படுத்துவது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். இதை நடைமுறைப் படுத்த திறமையான சுகாதாரப் பயிற்சி ஒன்றை அவர்களிடம் வளர்க்க வேண்டும். இதற்கு உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் ஒரு சிறந்த வாய்ப்பாகும். உலக சுகாதார பணிப்பாளர் நாயகம் டாக்டர் திருமதி மாக்ரட் வான் பூன் பூவுன் அவர்களின் கூற்றின்படி புகையிலையால் உண்டாகும் 8 நோய்களில் 6, கொடிய நோய்கள் எனவும் அவை சிறீ லங்கா மக்களுக்கும் பொருந்துமெனவும் கூறியுள்ளார். ஆகையால் நாட்டு மக்களிடம் புகையிலையால் உண்டாகும் கொடிய நோயின் கேடுகள் எவை என அறிவுரை செய்தல் சுகாதார அமைச்சின் கடமையாகும். தற்பொழுது சுகாதார அமைச்சு இந்தக் கொள்கைக்கு முன்னிடம் கொடுத்து நடவடிக்கை எடுத்துள்ளது. 2006ம் ஆண்டு பாராளுமன்றத்தில் மதுபானம், புகையிலைச்சட்டம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது ஒரு முக்கிய விடயமாகும். இச்சட்டம் தற்பொழுது நடைமுறையில் உள்ளது. அவற்றினால் கீழ்க்காண்பவை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

1. 21 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு புகையிலை உற்பத்திகளை விற்பது.
2. பொது இடங்களில் புகைத்தல்.
3. புகையிலை உற்பத்திகளை விளம்பரப் படுத்தல்.
4. புவையிலை உற்பத்தியாளர்களினால் விழாக்களைக் கொண்டாடுவதற்கோ அனுசரணை செய்வதோ.

சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் நாட்டில் புகையிலைப் பாவனை பெருமளவு குறைந்திருக்கின்றது.

இப் பெறுபேறுகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஈடுபாடுள்ளவர்கள் மூலம் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் நடைமுறைகளை கவனித்தல் வேண்டும்.

1. புகைத்தல் எதிர்ப்பு தினத்தின் முக்கியத்துவத்தையும் அதன் நடவடிக்கைகளையும் சுகாதார உத்தியோகத்தர்களிடம் அறிவுறுத்தல்களைக் கூட்டுதல்.
2. தேவையான உபகரணங்களைக் கொடுத்தல். (துண்டுப்பிரசுரம், விளம்பரப் பதாதைகள், சுகாதாரச் செய்திகள்.)
3. வைத்திய அதிகாரிகளின் மட்டத்தில் இச் செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
4. 2006ம் ஆண்டின் 27ம் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கவும்.
5. இந்த உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை கொண்டாடுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி இணைந்த அறிக்கை ஒன்றை ஒழுங்கு செய்வதற்காக உங்களது நிறுவனத்தில் / பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் பற்றிய அறிக்கையொன்றை 2009 யூன் 30 ஆம் திகதியாகும்போது இந்த அமைச்சின் தொற்றாத தோய்கள் பிரிவின் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

வைத்தியகலாநிதி. எச்.ஏ.பி.கஹந்த லியனகே
செயலாளர்,
சுகாதாரபராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

SECRETARY
Ministry of Healthcare & Nutrition
"Suwasiripaya"
385, Ven. Baddegama Wimalawansa Thera Mawatha,
Colombo 10.